3rd April 1965]

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: இது சரியாக நடக்கவில்லை என்று ரிஜிஸ்திரார் அவர்கள் கொடுத்த நோட்டீசை வைத்து இதை சூப்பர்செஷன் செய்தாகிவிட்டது. இப்பொழுது இதற்குத் தனி ஆபீசர் ஒருவரைப் போட்டு இது நடந்து வருகிறது. சர்க்காரைப் பொறுத்தவரையில் இதை விசாரிக்கவேண்டுமென்று சொல்லிவருகிருர்கள். அதற்காக ரிகார்டுகள் கேட்கப்பட்டிருக்கின்றன. வந்தபிறகு முடிவு செய்யப் படும்.

Revenue Receipts from sale of sandalwood, etc.

* 440 *Q.*—SRI M. V. KARIVENGADAM: Will the Hon. the **Minister for Co-operation be pleased to state the revenue receipts** from sale and auction of minor forest produces and sandalwood in the State during the years 1962, 1963 and 1964?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்:

ஆண்டு.	கிடைத்த விவரம்.
காடுபடு சிறு பொருள்கள்	ரூ.
1961–62	25,76,035
1962–63	27,21,034
1963–64	31,10,016
சந்தன மரம்.	
1962	81,63,715·00
1963	80,06,714·25
1964	92,90,364·35

திரு. எஸ். ஜே. ராமசாமி: நம்முடைய மாநிலத்தில் இவ்வளவு சந்தன மரங்கள் விற்பனை செய்யப்படுகின்றன என்று அமைச்சர் அவர்கள் கணக்குச் சொன்னுர்கள். இதை மைசூர் அரசாங்கத்தில் கொடுத்து சாண்டல் வுட் ஆயில் தயாரிக்க அரசாங்கம் ஒரு திட்டத்தை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: சந்தன எண்ணெய் எடுப்பதைவிட இதில் சர்க்காருக்கு அதிக லாபம் இருக்கிறது என்று கணக்கு எடுத்துப்பார்த்து முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதனுல்தான் இதை ஏலத்திலே கொடுத்துக்கொண்டு வருகிறேம். அவர்களும் ஏலம் எடுத்துக்கொண்டு இருக்கிருர்கள். வெளி ராஜ்யங்களிலிருந்தும் ஏலம் எடுத்துக் கொண்டிருக்கிருர்கள்.

ஆவடி முதலிய இடங்களில் சிறு நகரக் குடியிருப்புகள் அமைக்கும் திட்டம்

*** 441 கேள்வி.—திரு. மு. கருணநிதி:** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா :—

சென்னை நகருக்கு அருகேயுள்ள ஆவடி, அம்பத்தூர், மாதவரம், எண்ணூர் ஆகிய ஊர்களைச் சிறு நகரங்களாக (Townships) மாற்றும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றதா?